# ضعْ اسمَ حيوانٍ أو طيرٍ في الفراغِ

## கோடிட்ட இடத்தில் விலங்குகள் அல்லது பறவைகளின் பெயர்களைக் கொண்டு நிரப்புக

1 {وَإِذْ قَالَ مُوسَىٰ لِقَوْمِهِ إِنَّ اللَّهَ يَأْمُرُكُمْ أَن تَذْبَحُوا (........)}

இன்னும், (இதையும் நினைவு கூறுங்கள்). (.................) நீங்கள் அறுக்குமாறு அல்லாஹ் உங்களுக்கு நிச்சயமாக கட்டளையிடுகிறான்" என மூஸா தன் சமூகத்தாரிடம் கூறியபோது

2 {فَالْتَقَمَهُ (........) وَهُوَ مُلِيمٌ}

எனவே, (இவரை அவர்கள் கடலில் எறியவே) அவர் நிந்தனைக்கு ஆளானவராக இருக்க, (..........) அவரை விழுங்கிற்று

3 {وَتَفَقَّدَ الطَّيْرَ فَقَالَ مَا لِيَ لَا أَرَى (.........) أَمْ كَانَ مِنَ الْغَائِبِينَ}

இன்னும் அவர், பறவைகளைக் கணக்கெடுக்கப் பார்வையிட்டார், "எனக்கு என்ன ஆயிற்று? (..................)நான் காணவில்லையே! அல்லது அது (வராமல்) மறைந்தவற்றில் ஆகிவிட்டதா?" என்று கூறினார்

4 {فَبَعَثَ ٱللَّهُ (......) يَبْحَثُ فِى ٱلْأَرْضِ لِيُرِيَهُۥ كَيْفَ يُوَٰرِى سَوْءَةَ أَخِيهِ}

பின்னர், பூமியைத் தோண்டக்கூடிய (...................) தன் சகோதரரின் பிரேதத்தை எவ்வாறு அவர் மறைக்க வேண்டுமென்பதை அவருக்குக் காண்பிப்பதற்காக அல்லாஹ் அனுப்பி வைத்தான்

5 {قَالَ إِنِّي لَيَحْزُنُنِي أَن تَذْهَبُوا بِهِ وَأَخَافُ أَن يَأْكُلَهُ (........) وَأَنتُمْ عَنْهُ غَافِلُونَ}

அ(தற்க)வர் "நீங்கள் அவரை (அழைத்து)க் கொண்டு செல்வது நிச்சயமாக என்னைக் கவலையடையச் செய்கிறது, நீங்கள் (விளையாடிக் கொண்டு) அவரை விட்டுப் பாராமுகமானவராக இருக்கும் நிலையில் (.........) அவரை (அடித்துத்) தின்று விடும் என்று நான் பயப்படுகிறேன்" என்று கூறினார்

6 {يَأَيُّهَا (........) ادْخُلُوا مَسَاكِنَكُمْ لَا يَحْطِمَنَّكُمْ سُلَيْمَانُ وَجُنُودُهُ وَهُمْ لَا يَشْعُرُونَ}

(.........)நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள். சுலைமானும், அவருடைய படையினரும் உங்களைப்பற்றி உணராது, உங்களைத் திண்ணமாக மிதித்துவிட வேண்டாம்



MahadSunnah

7 {إن هذا أَخِي لَهُ تِسْعٌ وَتِسْعُونَ (.........) وَلِيَ (........) واحِدَةٌ}

நிச்சயமாக இவர், என்னுடைய சகோதரர், இவருக்கு தொண்ணூற்றொன்பது (..........) உள்ளன, எனக்கு ஒரே ஒரு (...........) தான் இருக்கிறது

8 {فَمَثَلُهُ كَمَثَلِ (......) إِن تَحْمِلْ عَلَيْهِ يَلْهَثْ أَوْ تَتْرُكْهُ يَلْهَث}

ஆகவே அவனுடைய உதாரணம்: (...........) உதாரணத்தை ஒத்திருக்கின்றது, நீர் அதனைத் துரத்தினாலும் நாக்கைத் தொங்கவிட்டுக் கொள்கிறது, அதனை(த் துரத்தாது) விட்டுவிட்டாலும் நாக்கைத் தொங்கவிட்டுக் கொள்கிறது

9 {أَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِأَصْحَابِ (.......)}

நபியே! (...............) காரர்களை உமதிரட்சகன் எவ்வாறு செய்தான் என்பதை நீர் தெரிந்திருக்கவில்லையா?

10 {كَأَنَّهُمْ (........) مُّسْتَنفِرَةٌ * فَرَّتْ مِنْ (........)}

அவர்கள் வெருண்டோடுகின்ற (..............................) இருக்கின்றனர். அவை (....................) வெருண்டோடின

11 {فَأَلْقَىٰ عَصَاهُ فَإِذَا هِيَ (.......) مُّبِينٌ}

அப்போது அவர் தன் கைத்தடியை போட்டார், அதே சமயம் அது தெளிவான பெரிய (.................)

12 {مَثَلُ الَّذِينَ حُمِّلُوا التَّوْرَاةَ ثُمَّ لَمْ يَحْمِلُوهَا كَمَثَلِ (.......) يَحْمِلُ أَسْفَارًا}

தவ்றாத்"தைச் சுமத்தப்பட்டு, அதிலுள்ளவாறு செயல்படாதவர்களின் உதாரணம்: ஏடுகளைச் சுமக்கும் (.................) உதராணத்தைப் போன்றதாகும்

13 {وَيَا قَوْمِ هَٰذِهِ (.......) اللهِ لَكُمْ آيَةً فَذَرُوهَا تَأْكُلْ فِي أَرْضِ اللهِ وَلَا تَمَسُّوهَا بِسُوءٍ}

அன்றியும் என்னுடைய சமூகத்தாரே! உங்களுக்கு ஓர் அத்தாட்சியாக இது அல்லாஹ்வுடைய (..........................) ஆகவே, அதனை விட்டுவிடுங்கள், அல்லாஹ்வுடைய பூமியில் மெய்ந்து கொள்ளும், அதற்கு யாதொரு தீமையும் செய்ய(க் கருதி) அதனைத் தொடாதீர்கள்

14 {وَأَوْحَىٰ رَبُّكَ إِلَى (.......) أَنِ اتَّخِذِي مِنَ الْجِبَالِ بُيُوتًا وَمِنَ الشَّجَرِ وَمِمَّا يَعْرِشُونَ}

மேலும், "மலைகளிலும் மரங்களிலும், அவர்கள் கட்டுபவைகளிலும் நீ கூடுகளை .அமைத்துக்கொள்" என்று உமதிரட்சகன் (................) உள்ளுணர்ச்சியை உண்டாக்கினான்


MahadSunnah

15 {فَأَرْسَلْنَا عَلَيْهِمُ الطُّوفَانَ وَ(.......) وَ(.......) وَ(.......) وَالدَّمَ آيَاتٍ
مُفَصَّلَاتٍ فَاسْتَكْبَرُوا وَكَانُوا قَوْمًا مُجْرِمِينَ}

ஆகவே. அவர்கள் மீது (மழையுடன் கூடிய) புயல் காற்று (..........), (..............), (..............), இரத்தம் ஆகியவற்றைத் தெளிவான அத்தாட்சிகளாக (ஒன்றன் பின் ஒன்றாக) நாம் அனுப்பி வைத்தோம், (இதன் பின்னரும்) அவர்கள் கர்வங்கொண்டார்கள், குற்றம் செய்த சமூகத்தாராகவும் அவர்கள் இருந்தார்கள்

16 {مَثَلُ الَّذِينَ اتَّخَذُوا مِنْ دُونِ اللهِ أَوْلِيَاءَ كَمَثَلِ (.......) اتَّخَذَتْ بَيْتًا}

அல்லாஹ்வையன்றி (மற்றவர்களைத் தங்களுக்குப்) பாதுகாவலர்களாக எடுத்து கொண்டவர்களுக்கு உதாரணம் (....................) உதாரணத்தைப் போன்றதாகும் அது ஒரு வீட்டை எடுத்து கொண்டது

17 {فَلَمَّا عَتَوْا عَمَّا نُهُوا عَنْهُ قُلْنَا لَهُمْ كُونُوا (.......) خَاسِئِينَ}

ஆகவே எதனைவிட்டும் அவர்கள் தடுக்கப்பட்டிருந்தனரோ அதனை விட்டும் அவர்கள் வரம்பு மீறியபோது “நீங்கள் இகழப்பட்டவர்களாக (...............) விடுங்கள்” என்று அவர்களுக்கு நாம் (சபித்துக்) கூறினோம்

18 {أَفَلَا يَنْظُرُونَ إِلَى (......) كَيْفَ خُلِقَتْ}

(.....) அது எவ்வாறு படைக்கப்பட்டிருக்கிறது? என்பதை அவர்கள் (கவனித்துப்) பார்க்க மாட்டார்களா?

19 {خُشَّعًا أَبْصَارُهُمْ يَخْرُجُونَ مِنَ الْأَجْدَاثِ كَأَنَّهُمْ (.......) مُنْتَشِرٌ}

அவர்களின் பார்வைகள் கீழ் நோக்கிய நிலையில் பரவிக்கிடக்கும் (..............) போல் அவர்கள் புதைகுழிகளிலிருந்து வெளியேறுவர்

20 {يَوْمَ يَكُونُ النَّاسُ (.......) الْمَبْثُوثِ}

அந்நாளில் மனிதர்கள் சிதறடிக்கப்பட்ட (..................) ஆகிவிடுவார்கள்

21 {مَنْ لَعَنَهُ اللهُ وَغَضِبَ عَلَيْهِ وَجَعَلَ مِنْهُمُ (......) وَ(.......)}

அல்லாஹ் எவரை சபித்து அவர் மீது கோபமும் கொண்டு அவர்களில் சிலரைக் (...........), (..........) ஆக்கினானோ

22 {فَرَاغَ إِلَىٰ أَهْلِهِ فَجَاءَ (......) سَمِينٍ}

பின்னர் தன் இல்லத்தாரிடம் விரைவாகச் சென்று கொழுத்த (..............) கொண்டு வந்தார்

23 {فَأَلْقَاهَا فَإِذَا هِيَ (.......) تَسْعَىٰ}

அப்பொழுது அவர் அதனைப் போட்டார் அச்சமயமே அது நெளிந்து செல்லும் (..............)

24 {ثَمَانِيَةَ أَزْوَاجٍ مِّنَ (......) اثْنَيْنِ وَمِنَ (......) اثْنَيْنِ}

எட்டு ஜோடிகளை (அல்லாஹ் படைத்துள்ளான் அவையாவன) (.............) இரண்டு மற்றும் (............) இரண்டு

25 {إِنَّ اللَّهَ لَا يَسْتَحْيِي أَن يَضْرِبَ مَثَلًا مَا (......) فَمَا فَوْقَهَا}

நிச்சயமாக அல்லாஹ் (...........) அதைவிட (அற்பத்தில்) மேற்பட்டதை உதாரணமாகக் கூறுவதற்கு வெட்கமடையமாட்டான்

26 {قَالُوا نَفْقِدُ صُوَاعَ الْمَلِكِ وَلِمَن جَاءَ بِهِ حِمْلُ (......) وَأَنَا بِهِ زَعِيمٌ}

அ(தற்க)வர்கள் "அரசருடைய (ஒரு பொற்) குவளையை நாங்கள் இழந்துவிட்டோம். மேலும் அதனை எவர் (தேடிக்) கொண்டுவந்தபோதிலும் அவருக்கு (...........) சுமை(தானியம் வெகுமதி) உண்டு. இதற்கு நானே பொறுப்பாளியாவேன் என்று (அவர்களில் ஒருவன்) கூறினான்

27 {إِنَّهَا تَرْمِي بِشَرَرٍ كَالْقَصْرِ كَأَنَّهُ (.......) صُفْرٌ}

எனினும்) நிச்சயமாக அது- (பெரிய) மாளிகையைப் போன்ற நெருப்புப் பொறிகளை அது வீசி) எறியும். நிச்சயமாக அது மஞ்சள் நிறமான (..................) இருக்கும்

28 {قالَ هِيَ عَصايَ أَتَوَكَّؤُا عَلَيْها وَأَهُشُّ بِها عَلى(.......) وَلِيَ فِيها مَآرِبُ أُخْرى}

அ(தற்க)வர், "இது என்னுடைய கைத்தடி. இதன்மீது நான் சாய்ந்து கொள்வேன். இதைக்கொண்டு (................) மரங்களிலிருந்து பறிப்பேன். இன்னும் இதில் எனக்கு வேறு பல தேவைகளும் இருக்கின்றன" என்று கூறினார்

29 {إِنَّ الَّذِينَ تَدْعُونَ مِن دُونِ اللَّهِ لَن يَخْلُقُوا (........) وَلَوِ اجْتَمَعُوا لَهُ}

மனிதர்களே! ஓர் உதாரணம் கூறப்படுகிறது . ஆகவே அதனை (ச்செவிதாழ்த்தி)க் கேளுங்கள் , அல்லாஹ்வையன்றி நிச்சயமாக நீங்கள் (தெய்வங்களென) அழைக்கிறீர்களே அத்தகையவர்கள் - அவர்கள் அதற்காக ஒன்று கூடினாலும் சரியே! (................)யைக்கூட படைக்கவே மாட்டார்கள்

30 {وَأَعِدُّوا لَهُم مَّا اسْتَطَعْتُم مِّن قُوَّةٍ وَمِن رِّبَاطِ (........) تُرْهِبُونَ بِهِ عَدُوَّ اللَّهِ وَعَدُوَّكُمْ}

மேலும், அவர்களுக்காக (அவர்களோடு போர் செய்வதற்காக) உங்களுக்கு பலத்தால் சாத்தியமானதையும் (......................) கட்டி வைப்பதையும் நீங்கள் (எந்நேரமும் தயார் செய்து வையுங்கள். இதனால் அல்லாஹ்வுடைய விரோதியையும், உங்களுடைய விரோதியையும் இவர்களல்லாத மற்றவர்களையும் பயப்படச் செய்வீர்கள்



MahadSunnah